1975 நவம்பர் 7]

தரங்கம்பாடியிலுள்ள ஆய்வு மாளிகை

* 234 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தரங்கம்பாடி கோட்டையிலுள்ள பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தரங்கம்பாடியில் டேனிஷ்காரர்களால் கட்டப்பட்ட கோட்டை இருக்கிறது. அது கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னுல் செப்பனிடப்பட்டு சிறப்பாக இருக்கிறது. நான்கைந்து ஆண்டு களுக்கு முன்னுல் அது செப்பனிடப்பட்டது. அதை மேலும் விரிவுபடுத்த, அதில் மேலும் கவனம் செலுத்த அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் அங்கே சென்றபோது அது பழுதுபார்க்கப் பட்டது. பழுதுபார்க்கப்பட்டு நான்கைந்து ஆண்டுகள் ஆகி விட்டதால், மேற்கொண்டு ரூ. 13,500 செலவில், சுவர்களுக்கு வர்ணம் பூசுவது, செப்பனிடுவது போன்ற வேலைகளை மேற்கொள் வதற்கு சம்பந்தப்பட்ட பொறியாளர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறுர்கள்.

Assistance for artisans.

* 235 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Handicrafts Development Corporation has proposed to give incentive bonus to artisans; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) தமிழ்நாடு கைவினைப்பொருள் வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர்கள் குழு 9—5—1974 அன்று நடந்த கூட்டத்தொடரில்,

கைவினை கலைஞர்களுக்கு ஊக்கமிகை ஊதியம் கொடுக்கும் திட்டத்திற்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. திட்டத்தைப் பற்றிய விபரங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

* 236 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Handicrafts Development Corporation proposes to advance loans up to Rs. 5,000 to small artisans under tie-up arrangements with commercial banks; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) கைவினைக் கலைஞர்களுக்கு கடனுதவி வழங்குவதற்கான செயற் குறிப்பு ஒன்றும் கைவினைப்பொருள் அபிவிருத்திக் கழகத்திடம் இல்லை. எனினும் அக்கழகம் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கி களிடத்தில் இதுபற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தின. நாட்டுடமை யாக்கப்பட்ட வங்கிகள் கைவினைக் கலைஞர்களுக்கு கடனுதவி வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அகில இந்திய கைவினைப் பொருள் கழகம், தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் தற்பொழுது இத்திட்டத்தைச் செயல்முறைப் படுத்த ஒத்துக்கொண்டுள்ளது. தாமுறு வட்டி விகிதத் திட்டத்தின் அடிப்படையில் இந்தக் குறைந்த வட்டிக் கடனுதவி வழங்கப்படும். இந்தக் கடனுதவி அந்தந்த மாவட்டத்திலுள்ள நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளின் கிளைகள் மூலமாக வழங்கப் படும். அதிகப்படியான கடனுதவி ரூ. 5,000 (ரூபாய் ஐயாயிரம்) ஆகும். வட்டி விகிதம் 4 (நான்கு) விழுக்காடு ஆகும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, குடிசைத் தொழில்கள் கைவினைப் பொருள்கள் என்ற இனத்தின் கீழ் வருவதாகக் கருதப்படுகிறதா? தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ் கின்ற பகுதிகளில் இத் தொழில்களை ஆர்வத்தோடு செய்ய முன் வருகிறார்கள். குறிப்பாக, என்னுடைய தொகுதியில், மதுராந்தகத்திலும் அச்சரப்பாக்கத்திலும் தாழ்த்தப்பட்ட மக்கள் இத்தொழில்களைச் செய்கிறார்கள். அவர்களுக்கு— அவர்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு தனிச் சலுகை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.